JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-4 Witness
for Prosecution

CC. No. 156/2025 Crime No. 152/2023 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW–4–பிரதாப் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025 | | | |

**எதிரி ஆஜர் இல்லை**
**முதல் விசாரணை**

நான் பூனாச்சியில் குடியிருந்து கொண்டு, டிரைவராக வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை, சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் காலை 10.00 மணியளவில் நான் பூனாச்சியில் உள்ள டெம்போ ஸ்டாண்டில் இருந்தேன். அப்போது இந்த விபத்தில் இறந்துபோன ஹரிஹரசுதன் என்பவர் TVS 50 வாகனத்தில் பூனாச்சியிலிருந்து அம்மாபேட்டை நோக்கி ரோட்டில் இடது புறமாக வந்து கொண்டிருந்தார். அப்போது ஹரிஹரசுதனுக்கு எதிர் திசையில் வந்த பைக் பின்னால் ஒருவர் அந்த பைக்கில் அமர்ந்திருந்தார். வேகமாக வந்த பைக் ஹரிஹரசுதனின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டது/ விபத்தை நேரில் பார்த்த நான் அருகில் சென்று பார்த்தபோது TVS 50 ல் வந்த ஹரிஹரசுதனுக்கு பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. பைக்கை ஓட்டி வந்த விவேக்கிற்கு தலையில் காயம் ஏற்பட்டு இருந்தது. பின்னால் அமர்ந்து வந்த நவீனுக்கு காயங்கள் எதுவும் இல்லை. பின்னர் நானும் அ.சா.3 குமரேசன் என்பவரும் ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவித்து ஆம்புலன்ஸ் வந்தவுடன் அடிபட்டவர்களை சிகிச்சைக்காக அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பைக்கில் வந்த இருவரும் மது போதையில் இருந்தார்கள். எதிரி விவேக்கை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். தற்போது அவர் நீதிமன்றத்தில் முன்னிலையில் இல்லை. வழக்கு தொடர்பாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்தில் இறந்த ஹரிஹரசுதனுக்கு வயது எவ்வளவு இருக்கும் என்றால், அவரது வயது எனக்கு தெரியவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும், ஹரிஹரசுதன் என்பவருக்கு 15 வயது தான் ஆகிறது என்றாலும், அவர்தான்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.10 18:47:35 +0530

வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் வேகமாக வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதியை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால், சரிதான். ஹரிஹரசுதன் அவர்களது அம்மா எனக்கு உறவினர் என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், ஹரிஹரசுதன் அவர்களின் அம்மா எனக்கு உறவினர் என்றாலும், பார்க்காத சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.10 18:47:43 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-3 Witness
for Prosecution

CC. No. 156/2025 Crime No. 152/2023 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW–3–குமரேசன் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025 | | | |

**எதிரி ஆஜர் இல்லை**
**முதல் விசாரணை**

நான் பூனாச்சியில் குடியிருந்து கொண்டு, குடிமை பொருள் வழங்கல் பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். எனது வீடு பூனாச்சி ராதா மளிகை கடைக்கு எதிர்புறத்தில் உள்ளது. தேதி, மாதம் நினைவில்லை, சுமார் 2 – 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை சுமார் 10.00 மணியளவில் நானும், பிரதாப் என்பவரும் எனது வீட்டில் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது இந்த விபத்தில் இறந்துபோன ஹரிஹரசுதன் என்பவர் அவரது TVS 50 வாகனத்தில் பூனாச்சியில் இருந்து அம்மாபேட்டை செல்வதற்காக ரோட்டின் இடது ஓரத்தில் வந்து கொண்டிருந்தார். அப்போது அம்மாபேட்டையில் இருந்து பூனாட்சி நோக்கி வந்த ஹீரோ ஹோண்டா பைக்கில் இரண்டு நபர்கள் மது போதையில் தள்ளாடிக்கொண்டே வந்து நிலை தடுமாறி மேற்படி TVS 50 வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார்கள். விபத்தை நேரில் பார்த்த நாங்கள் அருகில் சென்று பார்த்தபோது TVS 50 வாகனத்தில் வந்த ஹரிஹரசுதன் சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார். பைக்கை ஓட்டி வந்த விவேக் என்பவருக்கு தலையில் அடிபட்டு இருந்தது. பின்னால அமர்ந்து வந்த நவீனுக்கு அடிகள் எதுவும் இல்லை. பின்னர் நாங்கள் ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்து ஆம்புலன்ஸ் வந்தவுடன் அடிபட்டவர்களை அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். பின்னர் ஹரிஹரசுதனின் அம்மாவிற்கும் நான் தகவல் தெரிவித்தேன். எதிரி விவேக்கை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். தற்போது அவர் நீதிமன்றத்தில் முன்னிலையில் இல்லை. இந்த விபத்து தொடர்பாக ஹரிஹரசுதனின் அம்மா அம்மாபேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாக தெரிந்து கொண்டேன். வழக்கு தொடர்பாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.10 18:47:52 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபந்து நடந்த சமயத்தில் நான் வீட்டில் இருந்தேன் என்றால், சரிதான். நான் விபத்தை சத்தம் கேட்டு தான் பார்த்தேன் என்றால், சரிதான். இந்த விபத்தில் இறந்த நபர் எனது உறவினர் என்றால், சரியல்ல. எனது ஊரைச் சார்ந்தவர். நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை என்றாலும், இந்த வழக்கில் இறந்த நபர் எனது ஊரைச் சார்ந்தவர் என்பதால் அவரது அம்மா கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியில்லை.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.10 18:48:04 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

CC. No. 156/2025 Crime No. 152/2023 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW–2–நவீன் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025 | | | |

**எதிரி ஆஜர் இல்லை**
**முதல் விசாரணை**

நான் பள்ளக்காபாளையத்தில் குடியிருந்து கொண்டு, தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை, சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 10.00 மணியளவில் எதிரி விவேக் அவரது ஹீரோ ஸ்ப்ளெண்டர் பைக்கை ஓட்ட நான் பைக்கின் பின்னால் அமர்ந்து கொண்டு அம்மாபேட்டை நால் ரோட்டிலிருந்து அந்தியூர் நோக்கி சென்று கொண்டிருக்கும் போது, பூனாச்சி அருகில் நாங்கள் சென்ற பைக் விபத்தை ஏற்படுத்தியது. அந்த விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு தற்போது சரியாக ஞாபகம் இல்லை. ஆனால் விபத்து ஏற்பட்டபோது பைக்கை ஓட்டி வந்த விவேக் மது போதையில் இருந்தார். நாங்கள் சென்ற பைக் எங்களுக்கு எதிர் திசையில் வந்த TVS 50 ன் மீது மோதி விபத்து ஏற்படுத்தி விட்டது. இந்த விபத்தில் இறந்துபோன நபர் தான் மேற்படி TVS 50 ஐ ஓட்டி வந்தார். எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. பைக்கை ஓட்டி வந்த எதிரி விவேக்கிற்கு காயம்பட்டது. எதிரி விவேக்கை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடைபெறும்போது நான் மது அருந்தி இருந்தேன் என்றால், சரியல்ல. யார் எந்த வண்டி ஓட்டி வந்தார்கள் என்ற எந்த விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். யாருடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால், சரிதான். விவேக் எனது நண்பர் என்கிற அடிப்படையில் தான் அவரை எனக்கு அடையாளம் எனக்கு தெரியும் என்றால், சரிதான்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.10 18:48:12 +0530

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.10 18:48:20 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

CC. No. 156/2025 Crime No. 152/2023 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW–1–சங்கீதா | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025 | | | |

**எதிரி ஆஜர் இல்லை**
**முதல் விசாரணை**

நான் பூனச்சியில் குடியிருந்து கொண்டு. கூலி வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன ஹரிஹரசுதன் எனது மகன் ஆவார். கடந்த 23.06.2023 ஆம் தேதியன்று காலை சுமார் 11.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது குமரேசன் என்பவர் எனக்கு போன் செய்து அன்றைய தினம் காலை சுமார் 10.00 மணியளவில் எனது மகன் கரிஹரசுதன் அந்தியூர் – அம்மாபேட்டை ரோட்டில் முகாசிப்புதூர் யசோதா மளிகை கடை எதிரில் TVS XL மொபைட்டில் வந்து கொண்டிருந்தபோது எதிர் திசையில் வந்த பைக் மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாகவும், எனது மகனை ஆம்புலன்ஸ் மூலம் அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், தகவல் தெரிவித்தார். நான் உடனடியாக எனது குடும்பத்தினருடன் அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு எனது மகனை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக கூறினார்கள். விபத்து குறித்து விசாரித்தபோது விவேக் என்பவர் hero splendor பைக்கில் வந்து எனது மகன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக கூறினார்கள். பின்னர் நான் இந்த விபத்து தொடர்பாக அம்மாபேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு நான் கொடுத்தது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினம் மதியம் அந்தியூர் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற பிரத விசாரணையின்போது எனது மகனின் பிரேதத்தை அடையாளம் காட்டி உடன் இருந்தேன். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.10 18:48:33 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். எனக்கு படிக்கத் தெரியாது.

**நீதிமன்ற கேள்வி**

நான் கொடுத்த புகாரை போலீசார் படித்துக் காண்பித்தார்களா என்றால், படித்துக் காண்பித்தார்கள். அதன் பின்னிட்டு தான் நான் கையொப்பம் செய்தேன்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.10 18:48:39 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.